2015

2015 2015

No. of Printed Pages : 3

102395 **4956**

Register Number | | | | | | | |

**First Year**

# கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும்

# FACILITATING AND ENHANCING LEARNING

(Tamil Version)

நேரம் : 3 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**பகுதி - அ**

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளி. **15x2=30**

1. ஊக்குவித்தல் என்றால் என்ன?

2. குவிந்த கவனம் [Focussed attention] என்றால் என்ன?

3. வாழ்க்கை வரலாற்று முறையைக் கற்பித்தலில் மேற்கொள்வதில் ஆசிரியரின் பங்கு யாது?

4. செயல் விளக்க முறையில் கற்பிக்கும் போது நீவிர் கரும்பலகையை எவ்வாறு பயன்படுத்துவீர்?

5. கண்டறிமுறையின் நிறைகள் யாவை?

6. மேற்பார்வைப் படிப்பு என்பதை விளக்குக.

7. பட்டிமன்றம் மற்றும் கருத்தரங்கு வேறுபடுத்துக.

8. செய்தித் தொடர்பை ஏற்படுத்தும் மூலங்கள் யாவை?

[ Turn over

9. வருணனை செய்தல் என்றால் என்ன?

10. செய்தி அளிப்பில் ஏற்படும் தடைகளை எவ்வாறு நீக்கலாம்?

11. உயர்நிலை சிந்தித்தல் என்பது என்ன?

12. அறிவறிதல் செயலின் பண்புகள் யாவை?

13. ஆழக் கற்றல் என்றால் என்ன?

14. மனித உறவுத் திறன்கள் - விளக்குக.

15. பார்த்தல் மூலம் கற்றல் நிகழ்கிறது - எவ்வாறு?

## பகுதி - ஆ

II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். **10x4=40**

16. கற்றல் நடைபெற ஊக்குவித்தலின் முக்கியத்துவத்தைக் கூறுக.

17. கவனம் [Attention], கவனவீச்சு [Span of attention] விளக்குக.

18. செயல்திட்ட முறையின் படிநிலைகளை விவரி,

19. செயல்வழி கற்றல் முறையில் ஒவ்வொரு கற்றல் படியிலும் அமைந்துள்ள செயல்பாடுகள் யாவை?

20. தனி மாணவர் கற்றலின் சிறப்பியல்புகளைப் பட்டியலிடுக.

21. கணினி வழி கற்றல் மிகவும் பயன்தரக் கூடியது என்பதை விவரி.

22. ஒருவழிச் செய்தித் தொடர்பை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

23. செய்தித் தொடர்பில் அடங்கியுள்ள ஆறு உட்கூறுகளை விளக்குக.

24. புலனுணர்வு கற்றல் படிநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

25. திறனாய்வு சிந்தனை, ஆக்கச் சிந்தனை - ஒப்பிடுக.

26. ஆசிரியர் ஒரு மேற்பார்வையாளர் என்பதை விளக்கி சிறந்த மேற்பார்வையாளரிடம் அமைந்திருக்க வேண்டிய திறன்களைப் பட்டியலிடுக.

27. ஆழ்ந்த கற்றலுக்கும் மேலோட்டமாகக் கற்றலுக்குமான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

## பகுதி - இ

III. கீழ்க்கண்ட **மூன்று** வினாக்களுக்கு விடையளி. ஒவ்வொன்றிற்கும் **500** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும் **3x10=30**

28. கற்றல் கற்பித்தல் நிகழ்வில் மாணவர்களின் கவனத்தை நிலைநிறுத்த நீவிர் பின்பற்றும் வழிமுறைகளை விளக்குக.

**அல்லது**

விளையாட்டு முறையின் நிறை - குறைகளை விளக்கி தொடக்க நிலையில் மொழிப்பாடம் கற்பிக்க உதவும் ஏதேனும் மூன்று விளையாட்டுகளைக் குறிப்பிடுக.

29. ஒப்பார் குழு கற்றல் [Peer group learning] என்றால் என்ன? ஒப்பார் குழு கற்றலின் அனுகூலமான சூழ்நிலைகளை குறிப்பிடுக.

**அல்லது**

ஆசிரியர் மாணவரிடையேயும், மாணவர் - மாணவரிடையேயும் செய்தித் தொடர்பை ஏற்படுத்தும் வழிமுறைகளில் நீவிர் சிறந்ததெனக் கருதும் ஐந்து வழிமுறைகளை ஆராய்க.

30. மாணவர்களிடம் காணப்படும் ஆக்கச் சிந்தனைக்கான மனப்பான்மைகள் ஏதேனும் ஐந்தை விளக்குக.

**அல்லது**

நீவிர் கற்பித்தல் பயிற்சிக்குச் சென்றிருந்த பள்ளிகளில் எந்தெந்த வகையான கற்றல் பாங்குகளை மாணவர்கள் பின்பற்றினர் என்பதை விளக்கிக் கூறுக.

-oOo-